[29th October 1962

திரு. ம. கமலநாதன் : எவ்விதச் சம்பள உயர்வும் உத்தியோக உயர்வும் கம்பௌண்டர்களாக வந்தவர்களுக்கு இல்லாத காரணத்தினால் இந்த வேலைக்கு வருவதற்கு ஊக்கம் இல்லை என்பது கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அந்தமாதிரி தகவல் ஒன்றும் இல்லை. அந்த மாதிரி இருந்தால் கவனிக்கப்படும்.

Pharmacists (scale of pay)

* 889 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any representations have been received for the enhancement of the scale of pay of the Pharmacists; and

(*b*) if so, the action taken thereon?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : (*a*) Yes, Sir.

(*b*) In view of the recent revision of scales of pay, the proposal for further revision has been deferred.

ரத்த தானம்.

* 890 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆஸ்பத்திரிகளில் ரத்தம் விலைக்கு வாங்கப்படும்போது கூலி வேலை செய்யக்கூடிய ஏழைகள்தான் ரத்தம் கொடுக்க முன் வருவதால் அவர்கள் பலவித வியாதியால் பாதிக்கப்படுகிறார்கள் என்பது உண்மையா ?

(இ) வியாதியஸ்தர்களுக்கு ரத்தம் கொடுப்பதானால், அவர்களின் குடும்பஸ்தர்களின் ரத்தம் எடுத்துக்கொடுக்கும் பழக்கத்தை அமுலுக்குக் கொண்டுவர உத்தேசமுண்டா ?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : (*a*) No. (*b*) No.

புதிய பஸ் பாதைகள்

* 890-அ கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து . கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1961 நவம்பர், டிசம்பர், 1962 ஜனவரி, பிப்ரவரி, ஆகிய மாதங்களில் கொடுக்கப்பட்டுள்ள புதிய பஸ் பாதைகளின் வேரியேஷன்கள் எத்தனை, மாவட்ட வாரியாக ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : A statement [a] is placed on the table of the House.

Mr. SPEAKER : Questions are over.

---

[a] Printed as Appendix VII on page 112